# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2435/04 - 2025 මැයි මස 06 වැනි අඟහරුවාදා - 2025.05.06

2435/04 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைத் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு**

4 ஆவது திருத்தம்

2015, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய மற்றும் 1930/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

2025, ஏப்பிறல் 23.

**பகுதி** I

திருத்த இலக்கம் 01 - 2016, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 1995/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2018, யூன் மாதம் 25 ஆந் திகதிய மற்றும் 2077/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 03 - 2021, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதிய மற்றும் 2255/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை


1A - G 44298 — 05 (2025/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*பகுதி* II

*08. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் திணைக்களப் பரீட்சைகள்*

*8.4 திணைக்களப் பரீட்சைகள்*

I. *ஒவ்வொரு பதவிக்குமான திணைக்களப் பரீட்சை தொடர்பிலான விபரங்களைக் குறித்த பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.*

II. *அந்தந்த திணைக்களப் பரீட்சைகள் ஏற்புடைய திணைக்களங்களினால் நடாத்தப்படல் வேண்டும் என்பதுடன், ஆகக்குறைந்தது இரண்டு தொழில்நுட்பப் பாடங்கள் மற்றும் திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், சட்ட நடைமுறைகளுடன் தொடர்புடைய ஒரு பாடத்தைக் கொண்டமைதல் வேண்டும். அனைத்துத் திணைக்களப் பரீட்சைகளும் எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சைகளாதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பாடத்திற்கும் 3 மணித்தியாலங்களுக்குக் குறையாத எழுத்துமூல வினாப்பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும். செயன்முறைப் பரீட்சைக்குரிய கால எல்லைகள் அந்தந்த திணைக்களங்களினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.*

III. *ஒவ்வொரு உத்தியோகத்தரும் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதன் பொருட்டு முதலாவது மற்றும் இரண்டாவது திணைக்களப் பரீட்சைகளை இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் பூர்த்தி செய்தல் வேண்டும். திணைக்களப் பரீட்சையின் தொழில்நுட்பப் பாடங்களுக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், குறித்த பாடங்களுக்குரிய மொத்தப் புள்ளிகளின் சராசரி 50% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். திணைக்கள ஒழுங்குவிதிகளுக்குரிய பாடத்தில் சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 50% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

IV. *7.2.1.3. (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்குரிய தொழில்நுட்பத் தகைமையைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு திணைக்களப் பரீட்சையின் தொழில்நுட்பப் பாடங்களிலிருந்து விலக்களிக்கப்படும். அத்தகைய உத்தியோகத்தர் ஒருவர் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதன் பொருட்டு திணைக்கள ஒழுங்குவிதிகளுக்குரிய பாடத்தில் சித்தியடைதல் வேண்டும்.*

*10.1.2. திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதன் அடிப்படையில்*

*10.1.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்*

I. *நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.*

II. *சேவை வகுதியின் தரம் III இல் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஐந்து (05) சம்பளவேற்றங்களை உழைத்திருத்தல்.*

III. *பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.*

IV. *ஏற்புடைய மட்டத்தில் மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.*

V. *முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.*

VI. *முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*10.1.2.2 பதவியுயர்வு முறை*

1. *மூன்று வருட செயலூக்கமுள்ள சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் முதலாவது திணைக்களப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.*

2. *மேற்குறித்த 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ததன் பின்னர் நடாத்தப்படும் முதல் இரண்டு தொடர்ச்சியான பரீட்சை அமர்வுகளினுள் முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்திடையும் உத்தியோகத்தர்*

ஒருவர், மேற்குறித்த 10.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து தரம் II இதற்குப் பதவியுயர்த்தப்படுவார்.

10.2.2. திணைக்களப் பரீட்சையில் சித்தியடைவதன் அடிப்படையில்,

10.2.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. சேவை வகுதியின் தரம் II இல் ஆகக் குறைந்தது நான்கு (04) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் நான்கு (04) சம்பளவேற்றங்களை உழைத்திருத்தல்.

II. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

III. இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

IV. இரண்டாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

10.2.2.2. பதவியுயர்வு முறை :

I. தரம் II இற்குப் பதவியுயர்வைப் பெற்றுள்ள மற்றும் முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இரண்டாவது திணைக்களப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

II. மேற்குறித்த I இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்ததன் பின்னர் நடாத்தப்படும் முதல் இரண்டு தொடர்ச்சியான பரீட்சை அமர்வுகளினுள் இரண்டாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடையும் உத்தியோகத்தர் ஒருவர், மேற்குறித்த 10.2.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து தரம் I இற்குப் பதவியுயர்த்தப்படுவார்.

15. **இடைக்கால ஏற்பாடுகள்** :

இலக்கம் 15 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் 15.1 என இலக்கமிடப்படல் வேண்டும்.

15.2 இந்தத் திருத்தம் நடைமுறைக்கு வரும் தினத்தன்று சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இந்த இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

15.2.1. இந்தத் திருத்தம் நடைமுறைக்கு வரும் தினத்திற்குப் பின்னர் நடாத்தப்படும் முதல் இரண்டு பரீட்சை அமர்வுகளினுள் முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடையும் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர், இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் அல்லது மேற்குறித்த 10.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினம் ஆகிய இரு தினங்களில் பிந்திய தினத்திலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் தரம் II இற்குப் பதவியுயர்த்தப்படுவார்.

15.2.2. மேற்குறித்த தொடரிலக்கம் 15.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து தரம் II இற்குப் பதவியுயர்த்தப்படும் உத்தியோகத்தர் ஒருவரின், 10.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினம் அல்லது 2018.06.01 ஆந் திகதி ஆகிய இரு தினங்களில் பிந்திய தினத்திலிருந்து இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் வரையான தரம் III இல் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமானது பதவியுயர்வு நடவடிக்கைகளுக்காக மாத்திரம், தரம் II இல் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலமாகக் கருதப்படும்.

15.2.3. இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திற்குப் பின்னர் நடாத்தப்படும் முதல் இரண்டு பரீட்சை அமர்வுகளினுள் இரண்டாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடையும் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் அல்லது மேற்குறித்த 10.2.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினம் ஆகிய இரு தினங்களில் பிந்திய தினத்திலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்படுவார்.

*15.2.4.* இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திற்குப் பின்னர் நடாத்தப்படும் ஒவ்வொரு பரீட்சைக்குமுரிய முதல் இரண்டு பரீட்சை அமர்வுகளினுள் முதலாவது மற்றும் இரண்டாவது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடையும் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் தினம் அல்லது மேற்குறித்த 10.2.2.1 (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைத் தவிர அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தினம் ஆகிய இரு தினங்களில் பிந்திய தினத்திலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்படுவார்.

*15.2.5.* இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 1930/12 மற்றும் 2015.09.01 ஆந் திகதிய இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 15.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2018.06.01 ஆந் திகதி வரை இடைக்கால ஏற்பாடுகள் செயல்வலுப்பெற்ற போதிலும் திணைக்களங்களினால் திணைக்களப் பரீட்சைகள் நடாத்தப்படாமையின் அடிப்படையில் மாத்திரம் ஒரு திணைக்களப் பரீட்சைக்கேனும் தோற்ற முடியாமற் போன உத்தியோகத்தர்களுக்குப் புதிய சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தலின் கீழ் இரண்டு பரீட்சை வாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும் என்பதுடன், ஒரு திணைக்களப் பரீட்சைக்கு மாத்திரம் தோற்ற முடிந்த உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தலின் கீழ் ஒரு பரீட்சை வாய்ப்பை மாத்திரம் வழங்குதல் வேண்டும்.

EOG 05 - 0009

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.